ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

यमुत्सृज्य लोका भजन्त्यन्यदेवान् न तेषां विमुक्तिः फलं किंतु तुच्छम् ।
श्वपुच्छं गृहीत्वा तरिष्यन्ति के वा समुद्रं ह्यपारं नमस्तेऽस्तु तुभ्यम् ॥

गुरुभुजङ्गस्तोत्रम् ॥

உலகில் ஸர்வலோகத்திற்கும் பிரபுவாய்விளங்கும் ஸ்ரீ பாமேசுவரனைவிட்டு எந்த ஜனங்கள் ஸாமான்யமான இதரதேவதையை உபாஸிக்கின்றார்களோ அவர்களுக்கு அதனல் மோக்ஷமென்கிறஉத்தமபலம்கிடைக்கமாட்டாது.பின்னே! அற்பமான பலம்தான் கிடைக்கும். அதிக விசாலமாயிருக்கும் ஸமுத்திரத்தைத் தாண்டவேண்டுமென்கிற விருப்பம் ஒருவனுக்கிருப்பின் நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு கடலிலிறங்கி அக்கரைபோய்ச்சேறுவோமென்று கருதுவானு? கருதமாட்டான். சிறந்த மரக்கலத்தைக் கொண்டுதான் போக முயற்சிப்பான். அவ்விதம் மோக்ஷத்தை யடைய விருப்பமுள்ளவர்கள் எந்த ஈசனை ஆராதிக்கிறார்களோ அவ்வித மஹிமை வாய்ந்த ஹே பகவானே! உமக்கு வந்தனம்.

மோக்ஷமென்னும் சிறந்த புருஷார்த்தத்தைப் பெறவேண்டுமென்று அவாவிருப்பின் சாஸ்திரங்களில் எந்தெந்தஅதிகாரிக்கு எந்தெந்த தேவதையை எவ்விதம் உபாஸிக்கும்படி கூறப்பட்டிருக்கின்றதோ, அந்த தேவதையை அவரவரும் பக்தி சிரத்தையுடனுபாசித்தால் மட்டும் அந்தப் பலத்தைப் பெறலாமேயன்றி அதைவிட்டுத் தங்களுக்குத் தோன்றிய கீழான இதர தேவதையை உபாஸித்தால் கோரிய பலனை அடையமுடியாதாகையால் விதியை அனுஸரித்தே பகவானை ஆராதனம் செய்யவேண்டுமென்று ஒரு பெரியார் அறிவிக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

## பெண் குழந்தைகளை மிஷனெரி ஸ்கூலுக்கு அனுப்புவதால் உண்டாகும் அனர்த்தம்.

(௭௪௯-வது பக்கத்தொடர்ச்சி.)

கல்வியொன்றை மாத்திரம்தானா நாம் கவனிக்கவேண்டுவது? அதைப் பெறும் வழியால் விளையும் பயனையும் யோசிக்கவேண்டாமா? தீயபயன் விளைவதாயிருப்பின் அக்கல்வி கற்பதிலும் கல்லாமை ஆயிரம் மடங்கு நலம் அன்றோ? ஒருவன் கொடுப்பது அமிர்தமேயாயினும் அது விஷத்தோடு கலந்திருத்தலைக் காணில் அதனையுண்ணா தொழிக்கின்றோமல்லவா? அதுபோல், கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களால் வரும் கல்வியால் எப்போதாவது நம் மத தருமங்களுக்குப் பங்கம் நேரிடக்கூடியதாயிருப்பின் அதனை யொழிக்க முயலாது எற்க முயல்வது எவ்வளவு ஞானக்குறைவான காரியம்? ஆம். சுவிசேஷ போதகர்களும், ஏனைப் பாதிரிக் கூட்டத்தவரும் 'நமக்குக் கல்வியுண்டாக்கி நாகரீகமடையச் செய்யவேண்டும்' எனக்காட்டும் பரிவு வாஸ்தவமாய் இருப்பின், அவர்கள் பாடசாலைகளில் அவர்கள் மதக்கிரந்தங்களை யொழித்து நம்மதக்கிரந்தங்களைப் பாடமாக வைக்கட்டும் பார்ப்போம். அல்லது, எந்த மதக் கிரந்தங்களையும் வையாது வெறும் கல்வியைக் கற்பிக்கட்டும் பார்ப்போம். அப்பொழுதான் அவர்கள் வஞ்சகமற்ற பரிசுத்த எண்ணமுடையவர்கள் என அவர்களைத் துதிக்கலாம். அன்றியும், நாளைத்தினம் இராஜாங்கத்தார் தாங்கள்வைக்கும் பாடசாலைகளைப் போல் மிஷனரி பாடசாலைகளிலும் கிறிஸ்துமதக் கிரந்தங்களைப் போ

திக்கப்படாது என்று ஓர் சட்டம் பிறப்பிக்கட்டும். மறுதினம் மருந்திற்கேனும் ஓர் மிஷனரி பாடசாலை இருக்குமா பாருங்கள்! அப்போதவர்களை நோக்கி எம்மீது முன்னிருந்த பரிவு எங்கே என்று கேட்கில், எங்கள் மதம் போதிக்கப்படாத வரையிலும் எங்கள் கஷ்டார்ஜிதமாயுள்ள பொருளை உங்கள் விஷயத்தில் என் செலவழிப்போம் என்றல்லவோ சொல்வார்கள்! இதனை நாம் என் உய்த்துணரக்கூடாது?

கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்விகற்றவரில் நம்மதத்தை விட்டுக் கெட்டொழிந்தோர் இல்லையென்பதும் சரியல்ல. நம் தேயத்திலுள்ள சுதேச கிறிஸ்தவரில் பெரும்பாலர் நம்மதத்தி லிருந்து வழுவினோரன்றோ? எப்படி வழுவினார்கள்? கிறிஸ் தவர் போதனைகளினாலும், பல தந்திரங்களினாலும் அல்லவா? சென்னையில் சில காலத்திற்குமுன் நற்குடியில் பிறந்து மங்கைப் பருவமடைந்திருந்த நம்மினத்துப் பெண் ஒருத்தி, ஜனனு மிஷ னைச்சேர்ந்த ஒருத்தி தினே தினே செய்துவந்த துர்ப்போதனையி னால் மதிகெட்டு வீட்டை விட்டுச் சொல்லாமல் ஓடிக்கிறிஸ்தவ ரிடம் சேர்ந்து அவள் பிறந்த குடிக்கு அழியாப் பழியை வரு வித்த கதையையும், கூடலூரில் பிராமணச் சிறுவனொருவன் சில காலத்திற்குமுன், பாதிரிச்சியொருத்தியின் போதனையால் புத்தி கெட்டுப் பாதிரிக் கூட்டத்திற்சேர, அவனைப் பெற்ற மாதா பிதாக்கள் வயிறு எரிந்து பட்ட பாட்டையும் இதுபோல் இன் னும் பல அனுபவங்களையும் நாம் மறக்கலாமா? ஒரு சமயம் கிறிஸ்தவர் போதனைகளைக் கேட்ட தக்ஷணமே கெடுபவரில்லை என்று ஒப்புக்கொள்ளினும் அவர் மதாபாசங்கள் விளங்க வாரா விடத்துக் காலாந்தரங்களில் எங்ஙனமாகக் கூடும் என்பதைக் கவ னிக்கவேண்டும்.' விதையை நிலத்திலிட்டுச் சிலகாலம் சென்ற பின்னரே முளை எழும்பி வளர்ந்து பலன் தரும் என்னும் இயற் கை விதியை இவர் அறிகின்றாரில்லை. இவர் அறியாதொழியி னும் சுவிசேஷ போதகர்கள் அறிந்தே இருக்கின்றனர். 'நிலத்து இயல்பால் நீர் திரிந்தற்றாகும்' என்னும் தெய்வவிதியையும் அவர் கள் அறிந்துதானிருக்கிறார்கள். ஆதலால்தான் நம்மக்களைப் படிப்பிக்க 'வலியவந்து கெஞ்சிக்' கேட்கின்றனர். இந்த அற்ப

விஷயத்தையறியும் தரம் நம்மவர்க்கு இல்லையே. அந்தோ! இக்காலத்தில் நம்மில் சீர்திருத்த முற்படுவோரைச் சீர்திருத்துவதல்லவா கஷ்டத்திலிருக்கின்றது.

எமது பிரியமிகுந்த சுதேச நண்பர்களே, இனியாயினும் அசமந்தத்தை ஒழியுங்கள்; இயன்ற மட்டில் சொந்தத்தில் பாடசாலைகள் வைக்க முயலுங்கள், ஆரம்பத்தில் அற்பமாயிருப்பினும் பாதகமில்லை; நம்மத தருமங்களுக்கும் குலதருமங்களுக்கும்வரும் ஆபத்தைத் தனவான்களுக்குப் பலமுறை பன்னிப் பன்னி விளக்குங்கள், 'எறும்பூர கற்குழியுமே' என்ற தெய்வ வாக்கின்படி அவர்கள் மனம் ஒருகாலாவது நம் பரிதபிப்புக்கு இரங்கி உருகாமல் போகாது; ஐசுவரியவான்கள் மனம் வைத்தால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை; ஆங்காங்கு ஐந்து ஐந்து தனவான்கள் ஒன்றுகூடில் 'பஞ்சகர்த்தாக்கள்' போல் பெரும் காரியங்களையும் சிறுகச்சிறுகச் சாதித்துவிடலாம்; ஊர்மெச்சவும் அதிகாரிகள் மெச்சவும் சந்தேகப் பயனுள்ள காரியங்களில் பெரும் தனங்களைச் சில சமயங்களில் நம் இலக்ஷ்மீ புத்திரர்கள் செலவழித்தலிற் பயன் யாது? பெரும் கீர்த்தியும் பெரும்புண்ணியமுமாயுள்ள சுயமத சம்ரக்ஷணார்த்தமான கல்வி முதலியவற்றில் அந்தச் செலவில் அரைத்தாம் செலவழிக்கினும் அவர்கட்கு ஒரு குறையும் வராது. கடைசியாக நம்மதவைரிகளால் வரும் கெடுதிகளை மாற்றுங்கள். இதுவே நமதுகடமை என்பதை ஒருக்காலும் மறக்கக்கூடாது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

---

## ஸ்நானவிதி.

---

இப்பூவுலகத்தின்கண் ஸமஸ்தமான ஜீவராசிகளுக்குள் மானிடஜன்மம் மிகச்சிறந்தது, அதுபற்றியே

**जन्तूनां नरजन्मदुर्लभमतः पुंस्त्वं तथो विप्रता ।**

என்கிற வாக்கியத்தால் மானிடஜன்மத்தில் ஜனிப்பது மிகவும்

அரிது என்றும் அதில் ஸ்திரீயாய் ஜனிக்காமல் புருஷனாய் ஜனிப்பது மிகவும் அரிது என்றும் வேதாத்யயனம்செய்த பிராமணனாய் ஜனிப்பது இவ்வளவையும் காட்டிலும் அரிது என்றும் ஏற்படுகிறது. கூன், குருடு, செவிடு, இம்மாதிரியாக அங்கஹீனம் இல்லாமல் ஜனிப்பது மிகச்ரமம், அப்படி மனுஷ்யஜன்மாவிலிருந்து எவ்வளவோ தபஸ்கள்பண்ணிப் பிராமணஜன்மமடையவேணும். க்ஷத்ரியஜன்மாவில் இருந்த விச்வாமித்ர மஹரிஷியானவர் ஒரு காமதேனுவின் நிமித்தம்வஸிஷ்டமஹரிஷியோடுசண்டைசெய்து அவருடைய பிரும்மதண்டத்தினால் விச்வாமித்ருடைய அஸ்திர சஸ்திரம் முதலியயாவும் பயன்படாமற்போகவே அதனால் மிகக் கோபம்கொண்ட விச்வாமித்ரர் பிரும்மதேஜஸ்ஸினுடைய மஹிமையைக்கண்டு அதை அடைய அவர்பட்ட சிரமங்கள் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் பிரஸித்தம்.

ஆகையால் இப்படிப்பட்ட பிராம்மண்யத்திலிருந்து கொஞ்சம்கூட நழுவாமல் கர்மாக்களை அனுஷ்டித்தால் மட்டும் மோக்ஷத்தையடையலாமேயன்றி வேறு எவ்விதத்திலும் முடியாது. அவையாவன:—பிராதஸ்நானம், ஸந்தியாவந்தனம், பிரும்மயக்ஞம், சிவபூஜை—முதலியன.

அவற்றுள் முதலில் கூறியுள்ள பிராதஸ்நானம் என்பதைச் சற்று ஆராய்வோம். அதிகாலையில் ஸ்நானம்பண்ணாமலிருப்பதினால் தேகத்தில் உஷ்ணம் மிக அதிகரித்து அதனால் ஜுரம், சொரிசிரங்கு, கண்வலி முதலிய அனேக வியாதிகள் உண்டாகின்றன. இதையறியாத சிலர் தாங்கள் ஸ்நானம் பண்ணாததுமன்னியில் தவராமல் காலையில் ஸ்நானம் செய்கிறவர்களை ஒருபக்கம் பொழுதுவிடியுமுன் காக்கைபோல் முழுகுகிறார்களென்று தூஷிக்கிறார்கள். அவர்கள் உண்மையில் பிராதஸ்நானத்தின் மஹிமையையறியாதவர்கள். அறிந்திருந்தால் இவ்விதம் சொல்லமாட்டார்கள்.

## ஸ்நானபலன்.

ஸ்நானத்தினாலடையும் லாபத்தை புவியிலுள்ள எல்லா ஜாதியினரும் அறிந்து அந்தந்த சீதோஷ்ணகாலத்தை யனுஸரித்துக் குளிர்ந்த ஜலத்திலோ அல்லதுவெந்நீரிலோ ஸ்நானம்செய்து வருகிறார்கள். ஆயுர்வேதத்தில்

प्रातस्स्नानकरस्य पापहरणं दुस्स्वप्नविध्वंसनं
शौचस्यायतनं मलापहरणं संवर्धनं तेजसाम् ।
रूपद्योतकरं शरीरसुखदं कामाग्निसंदीपनं (चरके)
स्त्रीणां मन्मथगाहनं श्रमहरं स्नाने दशैते गुणाः ॥

காலையில் செய்யும் ஸ்நானம் பாபத்தையும், துஸ்வப்னதோஷத்தையும் போக்கடிக்கும், பரிசுத்தத்திற்கு ஆதாரமாயிருக்கும், அழுக்கைப் போக்கடிக்கும், தேஜோவிருத்தியையுண்டுபண்ணும், சரீரத்திற்குக்காந்தியைக்கொடுக்கும், காமசக்தியை விருத்திசெய்யும், சிரமபரிஹாரம் செய்யும், இவ்விதமாய் ஸ்நானத்தின் பலன் அநேகம் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்நானம்செய்யும் விஷயத்தில் அருணோதய காலத்தில்செய்வதே மிகச்சிறந்தது. ஸூர்யோதயத்துக்கு (4) நாழிகைக்கு முந்தின காலத்திற்கு அருணோதயகாலமெனப் பெயர்.

उदयात्प्राक्चतस्रस्तु नाडिका अरुणोदयः ।
तत्र स्नानं प्रशस्तंस्यात्स हि पुण्यतमस्स्मृतः ॥

என்று ஸ்காந்தம் கூறுகிறது.

அருணோதயகாலத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களே மிகப் புண்ணியம் பண்ணினவர்களாக ஆகிறார்கள்.

(स्मृत्यन्तरे)– संकल्पं सूक्तपठनं मार्जनश्चाघमर्षणम् ।
दवतातर्पणं चैव स्नानं पञ्चाङ्ग उच्यते ॥

என ஸ்நாநத்துக்கு ஐந்துவிதங்களான அங்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன அவையாவன.

(1) ஸ்நாநம்செய்வதற்குமுன்ஸங்கல்பம்பண்ணிக்கொள்ளுதல்
(2) வருண ஸூக்தங்களைச் சொல்லுதல்
(3) ஸ்நானம் பண்ணுதல்
(4) அகமர்ஷணம் ஜபித்தல்
(5) தேவரிஷி தர்ப்பணம் செய்தல்

மேற்கூறிய விதிப்படி ஸ்நானத்தைத்தவராமல் செய்வோமாகில் ஸமஸ்தமான பாபத்திலிருந்தும் விடுபட்டு சித்தசுத்தியடைவோம் என்பது நிச்சயம். அப்படியே விபாஸரும் கூறியுள்ளார்.

**प्रातस्नानेनसंशुद्धायेऽपि पापकृतो जनाः ।**
**तस्मात्सर्वप्रयत्नेन स्नानं प्रातस्समाचरेत् ॥**

மேற்கூறியபடி ஸ்நானம் செய்வதின் முக்யபலன் தேக ஆரோக்யம். அது விஷயம் 23-வதுஸஞ்சிகையில் 365-வது பக்கத்தில் K. R. வைத்தியனாதசாஸ்திரியள் விஷயமாய் கூறியுள்ளார். ஆகையால் அதை நான் விரித்துக்கூறவேண்டியது அனுவசியமாகும். காலையில் ஸ்நானம் பண்ணுதல் சாஸ்திரவிதியையனுஸரித்திருப்பதோடு சரீரத்துக்கும் பலவித ஸௌகர்யங்கள் இருக்கிறபடியால் யாவரும் பிராதஸ்நானத்தைத்தவராமல்செய்து வியாதியற்றவர்களாய் நீடூழிகாலம் வாழ்வார்கள் என்று எண்ணுகிறேன்.

நீலகண்டசாஸ்திரியர்,
கோமல்.

---

## வீண் கவலை வேண்டாம்.

---

(சுகூ0-வது பக்கத்தொடர்ச்சி.)

சொல்லவேண்டியன யாவும் சொல்லிப் பூர்த்தியாகிவிட்ட இந்த வியாஸம் நமது அன்பிற்குரிய ஆர்யதர்மத்தின் 43வது இலக்கத்தில் வெளியாகிவிட்டது. அதனைப் படித்த நண்பரொருவர் ஷை வ்யாஸத்திற்கண்ட ஜ்யோதிஷ விஷயங்களைப்பற்றி தமக்கு எவ்வித அபிப்பிராய வேற்றுமையுமில்லையெனவும்(Revati) ரேவதியை ஆங்கில எழுததில் எழுதி ஸங்கியை செய்யின் 75 ஆகிறது. உண்மைதானென்று மட்டும் தாம் தெரிவப்பதாயும் எனக்கு உள்ளன்போடு தெரிவித்திருக்கிறார். என்னை அவர் நேரில் பார்த்தவரன்று என்றாலும் ஆர்ய ஜாதிக்குரிய அபிமானத்

தோடும் மரியாதையோடும் எனக்கு அவர் கொண்ட கருத்தை யறிவித்ததற்காக நான் மரியாதை செலுத்தவேண்டியது அவசிய மாகும். இதனையொட்டி ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது "ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள பதத்தை 'ஸம்ஸ்கிருத மறியாத ஆங்கில பண்டிதர்கள்' தவறாக உபயோகிப்பதால் விளையும் ஒருபுதிய அநர்த்தத்தையும் எனது நண்பர் நினைவூட்டுகிறார்" என்பதே. ஸம்ஸ்கிருதபாஷையில் रेवति என்று எழுதும் பதத்தைத் தமிழில் "இரேவதி" என ஒருவர் எழுதி "ஸம்ஸ்கிருத பாஷையிலும் அஃது इरेवति என அபத்தமாக எழுதப்படவேண்டுமெனவும், க ட ப யா தி க் கணக்குப்படி அதனையும் எண்ண வேண்டுமெனவும் ஒருவர் நிர்ப்பந்தஞ்செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒருவர் இருவர் அபிப்பிராயத்தையொட்டி கோடிக் கணக்கான ஜனங்களால் வழங்கப்பட்ட பாஷை திருத்தப்பட முடியாது என்றுதான் உலகங்கூறும். இன்றுள்ள மனிதர்களின் மனம்போல் ஒரு பாஷை திருந்துவதாகக்கூட வைத்துக்கொள்வோம். அப்படியானாலும பிழையற்ற நிலையில் பரிபூர்ண ஆராய்ச்சியாளர்களால் பூர்வ காலத்தில் எழுதிவைக்கப் பெற்ற அநுபவ நூல்கள் இந்தப் புதிய மனிதர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க மாறமாட்டா. ஸம்ஸ்கிருதபாஷையில் அபாரமான பாண்டித்யம் நிறைந்த புராதன ஜ்யோதிஷ பண்டிதர்கள் தமது அநுபவ அறிவைப் பின் ஸந்ததியார்க்கு உதவிசெய்ய விரும்பியவர்களாய் கணித நுட்பத்தைச் சிற்சில பெயர்ச்சொல்லிலும் சிலேடையாக வழங்கியிருப்பது உண்மை. இதுபோல் ஒவ்வொரு பாஷையிலும் உண்டு. உண்டாக்கலாம்.

மூனும்பண்ணை கிருஷ்ணஜோஸ்யரவர்கள் தமிழர்களுக்கும் கணனத்தில் அறிவை வளர்க்கக்கருதித் தமிழிலே கணித சூத்திரங்களையும் திரட்டிப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். அதுபோல் ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஜ்யோதிஷகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து க ட ப யாதிக் கணக்கிலே பெயர் விளக்கஞ் செய்த நூலைக் கும்பகோணம் நண்பர் எனக்கு அறிவித்திருப்பின் அவர்க்கு நான் பெரிதும் நன்றி பாராட்டுவேன். ஆனால் ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் எந்த எந்தப்பதத்தை எந்த எந்த அர்த்

தத்திலும் ஸங்கேதத்திலும் உபயோகிக்கிறார்களோ அந்த அந்த பதத்தை அந்த அந்த அர்த்தத்திலும் குறிப்பிலும் ஆங்கிலமொழி பெயர்ப்பாளர் தமது பாஷைக்குக்கொண்டு செல்லவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் பாஷையின் சுவையும் கலையின் உயிரும் அழிந்துபோம். அவ்விதத்தவறை ஆங்கிலமொழிபெயர்ப்பாளர் செய்திருப்பதை எனது குடந்தை நேயரும் தெரிவித்திருப்பதை அவர் அறியாதிருப்பது ஆச்சரியமன்று. ஏனெனில் அவ்வித மொழி பெயர்ப்பு நூலையே இக்காலக் கல்வியடையப் பெறுகின்றது. "வீண்கவலைவேண்டாம்" என்ற வ்யாஸம் எந்த நண்பரைக்குறித்து எழுந்ததோ அதே நண்பரும் எனது குடந்தை நேயர் படித்த தவறான புத்தகத்தையே படித்திருக்கிறார். அதனால்தான் கொத்தமங்கலம் ஸ்ரீமான் சுந்தர ஜோசியரவர்களும் நானும் இரண்டுமூன்று வ்யாஸங்களெழுதியும் சந்தேகம் நீங்காத நண்பர்களின் தொகை குறையவில்லை. கடைசியாக நான் கூறுவது "ரேவதி" என்ற நட்சத்திரப் பெயரை ஸம்ஸ்கிருத வ்யாகரண சாஸ்திரத்தை மொழிபெயர்த்துள்ள ஸ்ரீ பண்டார்க்கர், ஜ்யோதிச் சாஸ்திரத்தை மொழிபெயர்த்துள்ள ஸுதாகரத்விவேதியார், வேதபாஷ்பத்தை ஆங்கலத்தில் தர்ஜமை செய்துள்ள மாக்ஸ்முல்லர் கீதாரஹஸ்யமெழுதிய ஸ்ரீ பாலகங்காதரதிலகராஜன் இவர்களின் அபிப்பிராயத்தை அனுசரித்து எழுதுவதென்றால் "Rvathi" என்றுதான் எழுதவேண்டும். இவ்வாறு எழுதி ஸங்கிகையை செய்யின் "ஆங்கில எழுத்துப் புத்தகப்படி" 83 தொகை வரும்.

உதாரணமாக 26 எழுத்துக்களைமட்டுங்கொண்ட ஆங்கில பாஷையில் A. முதலாவது எழுத்து என்பது போல, R. 18வது எழுத்து, E. 5-வது எழுத்து, V. 22-வது எழுத்து, A. 1 வது எழுத்து, T. 20-எழுத்து. H. 8 வது எழுத்து, I. 9வது எழுத்து ஆக 18+5+22+20+8+9 கூட்டினால் 82 ஆகிறது. ஆகவே காக்கேயஜோதிட நிபுணர் ஸ்ரீமான் வெங்கடாசல ஜோஸ்யரும் எனது குடந்தை நண்பரும் இரேவதியை 75 ஆக தவறாகக்கருதி அதை அதிசங்கைசெய்து இனியும் பிரளய பயத்தையுண்டாக்க இடமில்லையெனவும், ஹிந்து ஜோதிட சாஸ்திரம் மனித

கோடிகளுக்கு க்ஷேமகாலமாக இக்காலத்தைப்பற்றி அபிப்பிராயங் கூறுகின்றதெனவும் எனது தேசத்தினர்க்கு வணக்கத்தோடு தைரியமாக அறிவித்துக் கொள்ளுகிறேன்.

T. K. ராமபத்ர சர்மா.

---

## நவீன சீர்திருத்தம்.

தொன்றுதொட்டு அநாதியாக மேன்மைபெற்று வாழும் மதம் இந்துமதம் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இதில் ஏதோ சில கோளாறுகள் இருப்பதாகவும், அவைகளை யொழிக்க வேண்டுமென்றும் சிலர் தாங்கள், நம்முன்னோர்களைவிடச் சிறந்த புத்திசாலிகள் என்ற எண்ணத்திலோ,

घटं भिन्द्यात् पटं छिन्द्यात् कुर्याद्वा रासभध्वनिम् ।
येनकेनाप्युपायेन प्रसिद्धः पुरुषो भवेत् ॥

என்ற சுலோகத்திற்கிணங்க கீர்த்திபெற இஃது ஒரு வழியென்றோ—தவறுதலான வழியை உபதேசிக்க முன்வருகின்றனர். இவர்கள் தீரஆலோசித்து, இந்து மதத்திற்கு விரோதமில்லாத வழிகளை உபதேசித்தால் அதை ஒருவரும் ஆக்ஷேபிக்கப்போவதில்லை. வீடுகளைச் சுத்தமாக வைததுக்கொள்ளவேண்டுமென்றும், மது மாம்ஸாதிகளை நீக்கவேண்டுமென்றும் கூறினல் அதில் ஒருவரும் குறைகூற இடமிராது. இதைவிடுத்து இந்து மதத்திற்கே புறம்பான இழிவுபடைத்த முறைகளை வெளியிடுவதை என்னென்றுரைப்பது?

முன்ஸிபல் சபைகளுக்கும் சட்டசபைகளுக்கும் நமது பிரதிநிதிகளே செல்லுகின்றனர். ஓட்டுப்பெற முயலுங்கால் கூறும் வாக்குறுதிகளும், தனது வீரதீரப் பிரதாபங்கள் நிறைந்த பிரசுரங்களும் அளவிறந்தன. ஆனல் பிறகு? சுகாதாரத்துக்கேற்ற வழிகளைச் செய்வதில்லை. சுருக்கக்கூறுமிடத்துச் சுயநலப்

புலிகளாயிருக்கின்றனர். ஆனால், அங்குப் பல மதத்தினரையுங் கொண்ட மெஜாரட்டியால் இந்துமத தத்வத்தை நிர்ணயிக்கின்றனர். இவைகள் நமது மதத்திற்கு இழிவை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

மற்ற விடங்களில் தீண்டாதவர்களை வீதியில் தேவாலயம், அக்ரஹாரம் தவிர வர அனுமதிப்பதையோ, ராஜீயவிஷயங்களில் சமஉரிமை அளிப்பதையோ மறுக்க ஒருவரும் முன்வரமாட்டார்கள். ஆனால் புனிதமான கோவில்களுக்குள் வருவதையும், சமபந்தி போஜனத்தையும் கலப்பு விவாகத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொண்டால் நாம் இந்துக்கள் என்று கூற என்ன இடமிருக்கிறது? பல ஆயிரவருஷங்களாய் வேறு தெய்வத்தைத் தொழுதுவரும் தீண்டாதார் இன்று உங்கள் கோவிலுக்குள் வருவேனென்று கூறுவது எதனால்? சிறு கிராமங்களில் பணிவுடன் இதை மறுக்கும் தீண்டாதார் இன்றும் பலரிருக்கின்றனர். நமது கோவிலுக்குள் தீண்டாதார் வருவதற்கும் சுராஜ்யததிற்கும் என்ன சம்பந்தம்? மகம்மதியர்களும் கிறிஸ்துவர்களும் என் நமது கோவிலுக்குள் வரக்கூடாது? இவர்களும் தீண்டாதாரும் வேறு தெய்வங்களை இன்றுவரை வணங்கிவர, ஏதோ சிலர் செய்யும் அட்டகாசத்தினால் நாங்களும் கோவிலுக்குள் வருகிறோம் என்று கூற மிகச் சிலர் முன்வந்திருக்கின்றனர். தீண்டாதாருக்கு நல்லுடைகள் அளித்து அழகிய, சுகாதாரத்துக்கேற்ற வீடுகள்மைத்துக்கொடுத்து, கல்விபுகட்டி, கள் குடிப்பதை நீக்கிவிடும்படி செய்வதை யார் மறுகின்றனர்? இதைச் செய்யாமல் கோவிலுக்குள் அவர்களை வரவிடுவதனால் அவர்கள் பசிப்பிணி நீங்கிவிடுமா? கற்றவர்களாகிவிடுவார்களா? கல்வியறிவில்லாக் கசடர்களாக்கி, விபரீதக்கொள்கைகளைப்புகட்டி, இந்துமத தத்வம் அழிய ஏற்பாடு செய்து பெறும் ஸ்வராஜ்யமும் சீர்திருத்தமும் வெகு நன்று! உண்மையில் அனுதாபமிருப்பதாகக் கூறும் நண்பர்கள்—நல்லுடையணிந்து, கள் குடிப்பதையும், மாம்ஸம் சாப்பிடுவதையும் சிறுத்து, கல்வி கற்று சுகாதாரத்துக்கேற்ற நிலையில் வீடுகளமைத்து வாழும்படி செய்வதில் முழுக்கவனத்தையும் செலுத்தட்டும்.

சுவாமி சிரத்தானந்தர், தீண்டாமையை ஒழிப்பதை முன்னிட்டுச் செய்யும் வேலை போற்றத்தக்கதே எனினும், தமது கொள்கைக்கு விரோதமான கோவிலுக்குள் புகுவதை ஏன் ஆதரிக்கவேண்டும்? ஆரிய சமாஜத்தினருக்கு விக்ரஹ ஆராதனை கிடையாதாம். அப்படியிருக்க கோவில்களுக்கு இடையூறு விளைவிப்பது அழகல்ல. மேலும், பிராமணர்கள்தானே பிடிவாதமாக இதை மறுக்கின்றனர். அவர்கள்தானே சாஸ்திரங்களை எழுதியவர்கள். அப்படியிருக்க ஏன் பிராமணர்களாகத் தீண்டாதாரையும் தூண்டவேண்டும்? உபநயனம் முதலிய சம்ஸ்காரங்கள் யாருக்காக எவைகளால் விதிக்கப்பட்டன? சாஸ்திரங்களில் கூறப்பட்ட உபநயனத்தை மாத்திரம் ஆதரித்து, அவைகளிலேயே கூறப்பட்ட, "த்விஜர்களே உபநயனத்திற்குத் தகுதியுள்ளவர்கள்" என்பதைப் புறக்கணிப்பது ஏன்? இந்துமதமென்பது இந்துமத நூல்களில் கூறப்பட்டதை ஆதரிப்பதையே பொறுத்திருக்கிறது. இந்த ஆரியசமாஜம் விசுவாமித்திரருடைய காலத்திலிருந்தால் பாவம். அநாவசியமாக 4000 வருஷம் அவர் தபசு செய்திருக்கமாட்டார். நிற்க சுவாமி சிரத்தானந்தர் தமது கொள்கைக்கு ஆதாரமான நூல்கள் இருந்தால் கும்பகோணம் பண்டிதர்கள் அழைத்த வாதத்திற்கு ஏன் செல்லவில்லை? இந்து மதத்தில் நம்பிக்கை அதிகமில்லாததினாலோ, நிர்வாககர்கள் அதிக இலாபத்தைக் கருதுவதினாலோ "பிராமணன்" என்ற பத்திரிகை நன்கு பிரசாரத்தை அடையவில்லைபோலும்! அதனால் அதில் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதில் அளிப்பது அநாவசியமென்று கருதியோ சரியான விடை கூறவியலாதென்றோ, சுவாமி சிரத்தானந்தர் வராமலிருந்துவிட்டார். 1300 வருஷங்களுக்கு முன்பு தீண்டாமை இருந்தது கிடையாதென்று அவர் கூறினது சரியா? என்று பார்ப்போம். காளிதாஸருடைய காலம் இன்னதென்று தெளிவாகத்தெரியாவிட்டாலும் ஸ்ரீ ஹர்ஷனுடைய காலத்திலிருந்த பாணபட்டருக்கு முன்பிருந்தவர் என்று பாணபட்டருடைய நூல்களிலிருந்து தெரியவருகிறது. பாணபட்டருடைய காலம் கி. பி. ஏழாவது நூற்றாண்டு. காளிதாஸர் மனுவைப்புகழ்ந்து அவர் கூறும் நீதியையொட்டி 'திலீபர்' ஆண்டுவந்ததாகக்

கூறுகிறார். எனவே காளிதாஸருடைய காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மனு இருந்திருக்கவேண்டும். மனுவினுடையபெயர் வேதங்களிலும் காணப்படுவதுடன் அவர் கூறுவது பொன்னேபோல் போற்றத்தக்கதென்றும் காணப்படுகிறது. அந்த மனு தீண்டாமையைப் பற்றிக் கூறியிருக்கிறார். எனவே 1300 வருஷங்களுக்கு முன்பு தீண்டாமை கிடையாது என்று கூறியது ஆலோசியாமல், அல்லது ஆராயாமல் கூறியதே.

இவ்வாறே "ஹிந்துமத சித்தாந்தங்கள்" என்ற தலைப்புடன் இந்துமத தத்வம் என்று பாமரனும்கூற வெட்கப்படும் சில விஷயங்கள் வெளிவந்திருப்பது வெறுக்கத்தக்கது. இவர்களுடைய நோக்கமின்னதென்பதே விளங்கவில்லை. இந்துமத தத்வம் பிடிக்காவிட்டால், கிறிஸ்துவ மதத்திலோ, முகம்மதிய மதத்திலோ சேரட்டும். அவரவர்களுக்கு அவரவருடைய மததத்வம் புனிதமானது. உயர்ந்தது. போற்றத்தக்கது. எனவே வேறு மதங்களைத் தூஷிப்பது அறிவீனமாகும். நிற்க, இதைவிடுத்து நமது முன்னோர்களைவிடத் தீர்க்கதரிசிகள் என்ற அபிப்பிராயத்துடன், "உபநயனத்தை யாவருக்கும் பொதுவாக ஏற்படுத்தவேண்டும். வைதிகச் சடங்குகளை நிறுத்திவிடவேண்டும். பிதுர்க்களுக்குச் செய்யப்படும் சிரார்த்தத்தைப் பலமுறை அனுஷ்டிக்கலாகாது. கோத்திரவிதியையொட்டி மணம் செய்தல் கூடாது. கலப்பு விவாகம் செய்தல் வேண்டும்" என்பனபோன்ற உபதேசங்கள் செய்வது காலத்தின்கோலமே. மணம் என்பது மிருக இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்காக ஏற்பட்டதாயிருந்தால் இவர் கூறுவது முற்றிலும் சரி. நமது மதம் அப்படிப்பட்டதல்ல. நமது மணம் ரத்துசெய்யக்கூடியதல்ல. உறவினர்களுக்குள் ஒரே ஜாதியில் மணம் செய்துகொண்டால், பரஸ்பரம் அன்பு விருத்தியாகி ஒருவருக்கொருவர் உதவ வழிபிறப்பதுடன் ஒற்றுமையுடன் தம்பதிகள் தானதருமங்கள் செய்துகொண்டு வாழலாம் என்பது ரிஷிகளின் நோக்கம். மேலும், ஒரு கேள்வி கேட்கிறேன். வேறு தேசங்களில் நடக்கும் மணங்கள் குறைவின்றி இருக்கின்றன என்று உண்மையாய்க் கூறமுடியுமா? அப்படிக்கூறினால் மற்ற தேசசரித்திரம் அல்லது நடவடிக்கை உங்களுக்குத் தெரியாது.

உபநயனமென்பது வேதாத்யனம் செய்ய ஏற்பட்டது. இதரர் வேதாத்யயனம் செய்வதால் யாது பயன்? உபநயன ஸம்ஸ்கார முள்ள அந்தணர் வேறு தொழிலில்—கவர்ன்மெண்டு உத்தியோ கங்களில்—புகுந்ததினுல் பிராமணரல்லாதார் இபக்கமேற்பட்ட தென்பது தெரியுமா? எனவே, உபநயனம் செய்துகொண்டவர் களைச் சரியாக நடக்கச்செய்யுங்கள். பிறகு, பொதுவாக இதைச் செய்யலாம். மேலும் பொதுவாகச் செய்வதின் பயனென்ன? அந்தோ! உபநயனம் செய்துகொண்ட பிராம்மணர்கள் எதைச் சரிவரச் செய்கின்றனர். ஆங்கிலம் படித்து, கிராப் செய்துகொ ண்டு தமது மதத்தைக் குட்டிச்சுவராய் அடிக்கின்றனர். இப்படி யிருக்க இதரரும் வீணுக்கவேண்டுமா? மேலும், உபநயனம் செய்துகொண்டவர்களுக்கே கர்மானுஷ்டானம் செய்யாததினுல் பாபமுண்டு. பிறருக்குக் கிடையாது. அவர்களுக்கும் பாபமூட் டைக் கட்டிக்கொடுக்க உத்தேசமா? அல்லது பாபமே கிடையா தென்பது தங்கள் கொள்கையா? என்னே தங்கள் இந்துமதம்! என்னே தங்கள் கொள்கை!

நிற்க, இந்துமதத்தின் கஷ்டகாலத்திற்கறிகுறியாக உப யோகமற்ற சீர்திருத்தங்களில் சிலருடைய மனம் பற்றுகின்றது. இதனுல் மகாத்மா காந்தியுடைய உபதேசங்களைத் தூஷிக்கிறேன் என்று எண்ணக்கூடாது. அவர் கூறுவது முற்றிலும் சரி. ஆனுல் அதைக்கேட்டு ஒன்றைப் பத்தாக்கி நோக்கத்தை மறந்து தங்கள் மனதில் பட்டதைக் கூறுவோருடைய வாதமே விசித்திரமாயிருக் கிறது. இந்து மதத்திற்கு விபரீதமல்லாத சீர்திருத்தங்களை— உண்மையில் அவைகள் பயனுள்ளதாக விருப்பின்—அவற்றை ஆதரிக்க உண்மை இந்து பின்வாங்கமாட்டான். எனவே, நமது சாஸ்திரங்களின் உண்மை வெளிவரவும், மததத்வமின்னதென்று அறியாமல் வெளிவருபவர்களை ஆதரிக்காதிருக்கவும் "அகில பாரதவர்ஷீயப் பிராம்மண சபை" போன்ற சில சபைகள் ஏற்படு வது மிகவும் அவசியம்.

ஆரம்பக்கல்வியைப் பற்றியும் சில வார்த்தைகள் கூறவேண் டியிருக்கிறது. தமிழ்ச் சிறுவர்களுக்கு ட–ழ–ப–ம என்ற எழுத் துக்களே சுலபமாக உச்சரிக்கக்கூடியன என்று எண்ணுவது

பிசகு. பள்ளியில் சேருவதற்கு ஏற்பட்ட ஆருவது வயதிற்கு முன்பே, எளிதில் பல எழுத்துக்களையும் பிழையின்றி உச்சரிக்க வன்மையிருக்கிறது. எழுதுவதிலும் எளிதில் வரக்கூடியது என்பது மனக்கோட்டையே. சீர்திருத்தம் செய்து, போதிக்கப் பெறும் மாணவர்களுடைய அறிவு ஆழ்ந்ததல்ல என்று உலகில் பரவும் வதந்தியை அறியாதார் யார்? பிறமொழியைப் பயின்றவனுக்கு இந்தப் புதுவழி அநாவசியம். பல ஆயிரவருஷங்களாகக் குற்றமுள்ள ஒருவழி ஒரு தேசத்திலிருந்துவரமுடியாது. முன்னோர்களுடைய வழியைக் குறைகூறுவது எளிதுதான். ஆனால் புதுவழியில் பயனுண்டாகாது என்பது திண்ணம். ஒவ்வொரு முறையிலும் பழைய வழக்கமே மேன்மைபெற்றதென்று ஆராய்ச்சியின் பயனாகத் தெரியவருகிறது. ஆரம்பக் கல்வியிலும் அப்படியே தெரியவரும். பள்ளியில் வைப்பதற்கு முன்பு வீடுகளில் சிறுவர்களுக்குப் பழைய முறையிலே அக்ஷராப்பியாசம் செய்துவைக்கின்றனர். அதில் கஷ்டமொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் புதுமுறையில்—புதிய புத்தகங்கள் எழுத சிலருக்கு சமயம் வாய்க்கும். ஆகையால் உண்மை இந்துக்களே திடீரென்று பிறர் கூறுவதை நம்பி, ஆழம் தெரியாமல் காலைவிட வேண்டாம்.

ராமச்சந்திர சாஸ்திரி சிரோமணி,
ஸம்ஸ்கிருத வித்யாசாலை, சிதம்பரம்.

---

## பத்தாவது ஆண்டு நிறைவு.

कालोद्यत् दोषदुष्टां कुमतिजनततिं सान्त्वयन् शास्त्रवादैः
सर्वेषां मानुषाणामिह भुवि च परत्रापि सौख्यस्य हेतुम् ।
मार्गं सन्दर्शयन् संप्रति दशमसमायाश्च पूर्तिं प्रपन्नः
लोकाचार्यप्रसादा ज्जयतु सततमप्यार्यधर्मस्स एषः ॥

மிகவும் கொடுமைவாய்ந்த கலியின் தோஷத்தால் சாஸ்திர விருத்தமான மார்க்கங்களில் பற்றுதலுள்ளவர்களான கெட்ட

புத்தியையுடைய சில ஜனங்களுக்கு சுருதி, ஸ்மிருதி, புராணம் எனப் பெயர்வாய்ந்த சாஸ்திரங்களின் வசனங்களை ஆதாரமாகக்காட்டி நீங்கள் இவ்விதம் கெட்டவழிகளில் பிரவேசிப்பது சரியல்லவென்று இந்த வருஷத்தில், பல நீதிமொழிகள், பருத்தியின் பெருமை, சிவபெருமானின் மயானவாஸம் விபூதிதாரணம், தீர்த்ததானம் மிகச்சிறந்தது, உடை உடுத்தல், தல்லூர் அத்வைத வித்யாசாலை, ஆசாரம், இந்து தேவஸ்தான மசோதா, மஹாமஹோபாத்யாய பட்டம், வேதாந்த ஸாரம், கலியின் கொடுமையும் காக்கும் வழியும், ஏன் நாம் வேதாகம காவியங்களைக் கற்கவேண்டும், இந்துமத தர்மம், ஸ்திரீ தர்மம், வர்ணாச்ரமம், வைக்கமும் ஈழியவர்களும், தானம், ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம், சண்டாள ஜாதி தத்வ நிரூபணம், உபாகர்மம், வியாஸபூஜா மஹோத்ஸவம், வேதங்கள் அபௌருஷேயமானவை, நரகசதுர்த்தசி, மதாசார்யர்களும் அவர்கள் அருளியுள்ள பாஷ்யங்களும், யுக்திவாதம், ஸ்ரீ ராகவன் தசரதருக்குச்செய்த உபதேசம், காஞ்சி நகரத்தின் மஹிமை முதலிய பல சிறந்த விஷயங்களால் அவர்களுக்கு ஹிதத்தைப்புகட்டி, மற்றுமுள்ள சகல ஜனங்களுக்கும் இப்புவி லும், பரலோகத்திலும் சிறந்த ஸுகத்தைப் பெறுவதற்குக் ரணமான உத்தமமான மார்க்கத்தை அறிவிக்கின்றதாயும், தற் லம் பத்தாவதாண்டு பூர்த்தி என்கிற உத்ஸவத்தைப் பெற்றதாயும் மிகவும் பிரஸித்தியடைந்ததுமான "ஆர்யதர்மம்" எனப் பெயர்பூண்ட இப்பத்திரிகையானது லோகாசார்யாளாய் விளங்கும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்களுடைய அனுக்ரகத்தால் நீடூழிகாலம் செழிப்புடன் இவ்வுலகத்தில் உலாவி, வித்வான்களுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்து பலராலும் ஆதரிக்கப்பெற்று மேன்மேலும் விருத்தியடைந்து விளங்கவேண்டுமாய் ஸ்ரீ சந்திரமௌளீசுவரரையும் பிரார்த்திக்கின்றோம். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.